Srirangam Srimad
Andavan Ashramam



# ~V_8EOn

## HH Srimad Andavan SriVaraha MahaDesikan

### Vijaya Yatra - Thirupullani, Tamil Nadu

### 7th Chathurmasya Vratham
### July 10 - Sep 7, 2025

ஶ்ரீ:

ஶ்ரீ மத் ஆண்டவன் திருப்புல்லாணி விஜயம்

(ஏழாவது சாதுர்மாஸ்யம்)

🌸 வரவேற்புரை 🌸

இராமன் எனும் பரம்பொருள் சீதாபிராட்டியை தன்னிடம் சேர்த்துக் கொள்ள சேதுப்பாலம் கட்டிய திருப்புல்லாணி க்ஷேத்திரத்தில் நமக்கும் பரமனுக்கும் பாலமாம் ஆசார்யருக்கு ஓர் பணிவான வரவேற்புரை

ஶ்ரீ மதே நிகமாந்த மஹா தேசிகாய நமஹ

ஶ்ரீ மதே ரங்க ராமாநுஜ மஹா தேசிகாய நமஹ

ஶ்ரீ மதே ஶ்ரீ வராஹ மஹா தேசிகாய நமஹ.

1)

உற்ற உறவாய்த் தன்நற்றவம் எமக்காக்கி

வற்றாப் பெருங்கருணை வாரிவழங்கி

பெற்ற தாயினும் முற்றப்பரி முஷ்ணமுனி!!

பொற்றாமரை பதிய புல்லாணி எழுந்தருளுகவே

2)

சரணமறியா சிறியோர்க்கும் அரணாய் நின்று

முரண்படுவோரையும் இச்சையீந்தீர்த்து

மரணம்வரை மாறாமனந்தரு குருவே மதிக்

கிரணத்தண் பூரணக்கருணையுருவே வருகவே

3)

கனிவுத்தனியுரு கருணைப்பெருந்திரு

நனிநல்முருகுரு முஷ்ணமுனியெனுமொரு

முனியுரு அருட்தரு கொண்ட குருவுருவே

மனிதவுரு பரமன் படுத்தபுல்லாணி வருகவே

4)

பெற்றவளிழந்த சேயராய் தவித்ததொரு கூட்டம்.

சுற்றம்விட்டு துறவேற்று போக்கினீர் வாட்டம்

உற்று நோக்கி உள்ளம் உணர்த்தினீர் ஊட்டம்.

பற்றாய் பொலிபரமகுரு! புல்லாணி வருகவே.

5)

தரணி தாங்கிய திருப்பெயர் தாங்குமுனி!

தரணி தாங்கிய திருமால் தந்ததுதர

தரணி வந்த உமது கதை இனிதுபாட

தரணியோர் ஏற்கும் தீஞ்சொல் தரமாயருளுக

🌸 🌸 ஆசார்ய வைபவம் 🌸 🌸

---

அ ன்பின் அற்புதவுருவாய் அவதரித்தவராம் 1

அடைக்கலம் அனைவர்க்கும் தருபவராம்2

அணுக்கராய் நமக்கென்றும் ஆனவராம்3

அருந்தவமே வடிவாய் ஆனவராம்4

ஆதரவாய் அடியவர்க்கென்றும் ஆனவராம் 5

ஆகாயம் வரை மகிமை நிறைந்தவராம்6

ஆரண அறிவு முற்றும் உடையவராம் 7

ஆராவமுத இன்னாசியுரைகள் தருபவராம்8 (ஆசியுரை--அனுக்ரஹபாஷணம்)

இன்று நம்மிடை வாழும் தேசிகராம்9

இமயவுச்சி வரை சென்று வந்தவராம்10

இயல்பாய் இனிமையே நிறைந்தவராம்11

இடித்துரைத்து திருத்திப் பணிகொள்வாராம்12

ஈரடியாம் பாதுகையின் சேவகராம்13

ஈறுவரை நமக்கு துணையாவாராம்14

ஈன்ற தாயை விட மிகபரிவாராம் 15

ஈடில்லா ஈகை நெஞ்சம் உடையவராம்16

உன்னதமே உருவாய் உடையவராம் 17

உய்யவழிகள் நமக்கு தருபவராம்18

உணர்வில் நுழைந்து உயிரில் கலப்பாராம்19

உடலெடுத்த கருணை என்றே ஆனவராம்20

ஊழிமுதல்வனிடம் நம்மை சேர்ப்பவராம்21

ஊரூராய் போய் வழி காட்டுவாராம் 22

ஊற்றாய் வாஞ்சைக்கு ஆனவராம் 23

ஊழகற்றித் தருபவர் இவரன்றி வேறுயாராம்24

எளிமையின் திருவுருவென திகழ்பவராம்25

எண்ணத்துள் எப்போதும் ஆசார்யன் வைத்தவராம்26

எதிராசர் திருவடி சிரமேற்றவராம்27

எந்தையும் தாயும் தமரும் நமக்கவராம்.28

ஏறு போல் நிமிர்நடை பொலிபவராம்29
ஏதுவின்றியே கருணை பொழிவாராம்30
ஏற்றமெலாம் ஒரு பார்வையில் தருவாராம் 31
ஏக்கம் நமக்கெல்லாம் தீர்ப்பாராம்32

ஐந்தடக்கிய மாதவம் உடையவராம்.33
ஐஸ்வர்யம் அருளுமவர் கண்மலராம்34

ஒளிவிழி கசிகருணையால் காப்பவராம் 35
ஒப்பிலா அவர்நீர்மை மாந்தியோர் மிகப்பலராம் 36

ஓடமென பிறவிக்கடலுக்கு ஆவாராம் 37

ஔதாரியமே வடிவாய் வந்தவராம் 38

அவர் வைபவம் இனிய இளநீராம்.39

ராம ராம ஜெய வராஹ மஹா தேசிகராம்
ராம ராம ஜெய வராஹ மஹா தேசிகராம்

கருவாய் முஷ்ணமுனி தம்பதியர்க்கு உருவானாராம் 40
காவலாய் வைணவத்துக்கென உதித்தாராம்41
கிளரொளி தையுத்திராடம் தனில் பிறந்தாராம் 42
கீர்த்திமிகு குலக்கொழுந்தென கொண்டாடினராம் 43
குழந்தைக்கு ஸ்ரீமத்யாமுனனென பெயர் சூட்டினராம் 44

கூப்பிடுவதோ மணிவண்ணன் என்ற பெயராம் 45

கெட்டிக்கார சிறுவராய் வளர்ந்தாராம் 46

கேள்விகள் பல கேட்டு தெளிவாராம்.47

கைங்கர்ய பிரியனாய் பொலிந்தாராம்.48

கொண்டாட்டமாய் உடன்பிறந்தோருடன் வளர்ந்தாராம்49

கோபமறியா பிள்ளையாய் திகழ்ந்தாராம்50

கௌமாரப் பருவம் அடைந்தாராம்51

சரிவயதில் உபநயனம் பெற்றோர் செய்வித்தாராம் 52

சாத்திரக்கல்வி மதுராந்தகத்தில் படித்தாராம் 53

சிலகாலத்திலேயே சம்ஹிதைகள் கற்றாராம் 54

சீர்மிகு மேல்பாக்கம் ஸ்வாமி சீடரானாராம்55

சுடரறிவு ஆகமங்கள் முற்றும் தெளிந்தாராம் 56

சூத்திரங்கள்  பலவும் சூரராய் கற்றாராம்.57

செங்குறிச்சி ரங்கநாதாரவர் குருவானாராம் 58

சேவைகள்  குருவகத்தில் செய்தே வாழ்ந்தாராம் 59

சைத்திர திறனும் உயர்வாய் வாய்த்தவராம் 60

சொல்லரிய அழகுக் கோலங்கள் வரைவாராம் 61

சோர்வறியாது பலகல்வி தெளிவாய்க் கற்றாராம்62

சௌஜன்ய அருங்குணத்தோடே பழகுவாராம்63

ஞானவொளி தேசுமுற்றத் திகழ்ந்தாராம் 64

தமிழுடன் வடமொழி  விற்பனரானாராம் 65

தாரையென பலஸ்லோகம் பொழிவாராம்.66

திருக்குடந்தை ஆண்டவனிடம் ஸ்ரீபாஷ்யம் கற்றாராம்67

துணையாய் தந்தையும் தம்பியும் கற்றனராம்68

தூய துறவெனுந் தியாகம் தந்தை செய்தாராம் 69

தெய்வச்செயலதுவென மனமுருகி ஏற்றாராம்70

தேறியே இன்னும் பல கல்வி தெளிந்தாராம் 71

தைரியம் மிகுந்த இளைஞரானாராம் 72

தொடங்கினர் திருமணப் பேச்சை உறவினராம் 73

தோதாய் புளியரணைப் பெண் கிடைத்தாராம்74

நங்கை ராதாதேவியை நல்மணம் புரிந்தாராம் 75

நாவல் பாக்கம் ஸ்வாமியிடம் இணைந்தாராம் 76

நிபுணத்துவம் ஆராய்ச்சியில் பெற்றாராம்77

நீள் ஆய்வறிக்கை சமர்ப்பித்தாராம் 78

நுண்ணறிவு முனைவராய் ஆனாராம்79

நூல்கள் இன்னும் பலவும் படித்தாராம் 80

நெருப்பென ஆசாரம் கடைபிடிப்பாராம்81

நேர்த்தியாய் இல்லறம் நடத்தினாராம் 82

நைச்சியானுசந்தானத்தில் மிகப் பெரியவராம்83

நொடியில் ஸ்லோகம் புனைவதில் வல்லவராம் 84

நோற்ற தவங்கள் பலவும் உடையவராம் 85

பரமன் இடையில் ஒரு துன்பம் தந்தாராம் 86

பாதைதரு முஷ்ணமுனி தானெடுத்துக் கொண்டாராம்87

பிடிப்பின்றி வைணவர் தவித்தனராம் 88

பீடமேற யாருமின்றி கலங்கினராம் 89

புலரியென இங்கிவரே கைகொடுத்தாராம் 90

பூரணவருட் சிந்தனையே நமக்காய் கொண்டாராம் 91

பெருந்தியாகம் செய்து துறவு பூண்டாராம் 92

பேறாய் ஆசார்ய ஸ்தானம் ஏற்றாராம் 93

பையப்பைய அடியவர் வாட்டம் போக்கினாராம் 94

பொலிவேறிய வைணவத்தால் பாரோர் மகிழ்ந்தனராம் 95

போற்றியே அவர் திருவடி பலரும் சேர்ந்தனராம் 96

பௌவமென கருணை அனைவருக்கும் பொழிந்தாராம் 97

மங்களாசாசனம் பல திருப்பதிகளில் செய்தாராம்98

மாலடி பாதுகையே அவரது உள்ளுயிராம் 99

மிருதுநெஞ்சத்தால் உலகோர் கவர்ந்தாராம் 100

மீனெனக் கண்ணாலெமை மீளாவழி நகர்த்துவாராம்101

முக்கிய அறமாய் விருந்தோம்பலே செய்பவராம்102

மூதறிஞரோடு பலசதசுகள் நடத்துவாராம்103

மெச்சிப் புகழ்ந்து அவரை ஊக்குவிப்பாராம் 104

மேன்மை பரிசுகளவர்க்கு அள்ளித் தருவாராம்105

மையநிலை என்றும் மாறாதவராம் 106

மொய்க்கும் அடியார் காணிக்கை பல கொட்டுகின்றனராம் 107

மோனையெதுகை சொல்வன்மை மிக்கவராம் 108

மௌனமாய் பலசாதனை புரிந்தவராம்109

யக்ஞும் பலவும் நடத்தினாராம் 110

யாத்திரை பாரதம் முழுவதும் செய்தாராம் 111

யுகபுருஷராய் நமக்கென வந்தவராம் 112

யூகவறிவு மிகப்பொலி விவேகியவராம் 113

யோக்யதை சற்றும் நோக்காதருள்பவராம் 114

யௌவனதசை என வைணவம் பொலிவித்தாராம்115

வசீகர இளநகையால் நம்மைக் கவர்பவராம்116

வயிறு நிறைத்தே வந்தோர் திருப்புவாராம்117

வள்ளன்மை பெருவியல்பில் பெரியவராம் 118

வந்தவர் வல்வினை அகன்றனராம்119

வாஞ்சை சீடரிடத்து எல்லை இல்லாதவராம் 120
வாழ்வில் நமக்கோர் ஆத்மபந்துவெனத் திகழ்பவராம்121
வாகாய் பொற்சீலை வரதனுக்கு சமர்ப்பித்தாராம்122
வானுயர் ஆலயக் குடமுழுக்குகள் பல செய்தாராம் 123

வித்தகத் தேரொன்று மங்கலவூர் சமர்ப்பித்தாராம்124
விதவித கோவில்பணி பல செய்கிறாராம் 125
விகடச் சொல்வன்மை மிக்கவராம்126
விதவித பிரசாதம் செய்யப் பணிப்பாராம் 127

வீசும் மணநிறை சமையல் கலை வல்லுநராம்128
வீங்கிளவேனிலென இதமவரது அடிமலராம் 129
வீசமேனும் தீதண்டாது காக்கும் நோக்குடையவராம்130
வீற்றகோலம் சிம்மாசன அழகியவராம் 131

வெண்மன பாலினிமை தூயவராம்132
வெகுமதி அருள்வதில் நிகரில்லாதவராம் 133
வெகுண்டரிதே திருத்திப் பணிகொள்வாராம்134
வெண்பரிமுகர் வரப்பிள்ளைமுனியுரு இவராம் 135

வேண்டியதெல்லாம் உணர்ந்தே அருள்பவராம் 136
வேத பாடசாலை பல ஆதரிப்பவராம்137
வேதரக்ஷணமே உயிரெனத் திடமானவராம் 138
வேங்கட நாதனெனுந் தேசிகப்ரியராம்139

வைணவம் தழைக்க வந்த யதிவேந்தராம்140

வைரநிகர்த்து தனித்தொளிர்பவராம் 141
வைகுந்தம் நமையேற்றி விடுவாராம்142
வைபவம் அவரதென எழுதியதிதை  ஏற்றருள்வாராம்143

ராம ராம ஜெய வராஹ மஹா தேசிகராம்
ராம ராம ஜெய வராஹ மஹா தேசிகராம்

ஆழ்ந்து  நெகிழ்ந்து துழாயனோடு வாழ்பவரே
வீழ்ந்தேன் ஊழுந்துலகு சூழ்ந்தீரெனை எழுந்தேன்
போழ்ந்து நுழைந்தீர் கொழுந்தாய் மனதழுந்தி
தாழ்ந்து விழைந்தேன் செழுந்தேனுமதுகதையே

நெஞ்சு குழைந்து கஞ்சத் திருவடிப்பணிந்து
அஞ்சுமனம் தவித்துத் தஞ்சம் விழைந்தேன்
பஞ்சுமனம்பரிந்து மஞ்சுதமிழ் ஏற்று
கொஞ்சுமழலையென இவை பொறுத்தருளுகவே

வண்டூதா மலரணி மாலடிமாதவ முனி!
குண்டூசி கொண்டு கிணறு தோண்டுவதென
மண்டூக மதியாலும் மகிமை பாடவெண்ணம்
கொண்டூறும் மகவாய் மன்னித்தெனை ஏற்பீர்

சுபம்